செ.வெ.எண்:15 நாள்:06.07.2021

**கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா தொற்றிற்கு பிந்தைய சிறப்பு சிகிச்சை பிரிவை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் திறந்து வைத்தார்.**

---

கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்று(06.07.2021) கொரோனா தொற்றிற்கு பிந்தைய சிறப்பு சிகிச்சை பிரிவு, ரூ.75 இலட்சம் மதிப்பில் 400 லிட்டர் ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையம் ஆகியவற்றை திறந்து வைத்து, ரூ.30இலட்சம் மதிப்பில் எக்மோ கருவியை மருத்துவமனைக்கு மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் வழங்கினார். தொடர்ந்து, அரசு மருத்துவக்கல்லூரியில் மருத்துவமனையில், கர்ப்பிணி தாய்மார்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்படுவதையும், குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவினையும் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, இணை இயக்குநர்(மருத்துவம்) மரு.கிருஷ்ணா, துணை இயக்குநர்(சுகாதாரம்) மரு.செந்தில் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தினை கொரோனா தொற்றில்லா மாநிலமாக மாற்றிட பல்வேறு நடவடிக்கைகளை போர்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறார்.

தமிழ்நாடு அரசின் தெளிவான திட்டமிடல், தேவைப்படும் இடங்களில் சிறப்பு சிகிச்சை மையங்களை கட்டமைத்தல், போதிய அளவிலான ஆக்சிஜன்

படுக்கை வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளால் கொரோனா தொற்றுப்பரவல் கட்டுக்குள் வந்துள்ளது.

குறிப்பாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் நாளொன்றுக்கு 4,500 தொற்றுக்கள் வரை கண்டறியப்பட்ட நிலையில் தற்போது நாளொன்றுக்கு 500க்கும் குறைவான புதிய தொற்றால் பாதிக்கப்பட்டவர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். புதிய தொற்றுக்கள் குறைவதற்கு பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்பும், மருத்துவர்கள் மற்றும் அனைத்து தரப்பினரின் அர்ப்பணிப்பு மிக்க பணிகளுமே காரணம் ஆகும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்றால் பதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் சார்ந்த பகுதிகளிலேயே தனிமைப்படுத்தி சிகிச்சையளித்திட ஏதுவாக, சிறப்பு சிகிச்சை மையங்களில் கூடுதலாக படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது இரண்டாம் கொரோனா தொற்று பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மேலும் புதிய தொற்றுக்கள் கண்டறியப்படுமானால் அத்தகைய சூழ்நிலையினையும் எதிர்கொள்ளும் வகையிலும் சிறப்பான மருத்துவ கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் குழந்தைகள் கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோராயின் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகள் நலப்பிரிவில் 30 தீவிர சிகிச்சை படுக்கைகள், 100 ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள், 370 சாதாரண படுக்கைகள் என 500 படுக்கைகளும், இ.எஸ்.ஐ மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 100 தீவிர சிகிச்சை படுக்கைகளும், 70 ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள் என 170 படுக்கை வசதிகள் குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதுபோலவே, கொரோனா தொற்றிலிருந்து மீண்டவர்கள் மற்றும் இணை நோய் உள்ளவர்கள் பல்வேறு உடல் உபாதைகளால் பாதிக்கப்படும் சூழ்நிலையில் மருத்துவர்களின் ஆலோசனைப்படி சிகிச்சை மேற்கொள்வது அவசியம் ஆகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்க்ள சட்டமன்றத்தில் அரசு மருத்துவமனைகளில் கொரோனோ வைரஸ் தொற்றிற்கு பிந்தைய சிறப்பு சிகிச்சை பிரிவு தோற்றுவிக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள்.

அதனடிப்படையில், கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா தொற்றிற்கு பிந்தைய சிறப்பு சிகிச்சை பிரிவு இன்று துவக்கிவைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் அனைத்து வார நாட்களிலும் ஒரு மருத்துவ நிபுனர், ஒரு செவிலியர், ஒரு இயன்முறை பயிற்சி அளிப்பவர், ஒரு மருத்துவர், ஒரு மனநல மருத்துவர் மற்றும் சிகிச்சை உதவியாளர்கள் காலை 7.30 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை பணியாற்றுவார்கள்.

அதிக இரத்த சர்க்கரை, அதிக இரத்த அழுத்தம், மூச்சு விடுவதில் சிரமம், தொடர் இருமல், சுவையின்மை, வாசனையின்மை, ஸ்டிராய்டு மருந்து சார்ந்த பிரச்சனைகள், பசியின்மை, உடல் எடை குறைதல், தூக்கமின்மை, மன அழுத்தங்கள் போன்ற பிரச்சனைகளால் பாதிக்கபடும்போது அரசு மருத்துவமனையினை சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

இப்பிரிவில் கொரோனா நோயால் பாதிக்கப்பட்டு மீண்டவர்கள் அனைவரும் வந்து ஆலோசனை பெறவும், தேவைப்பட்டால் உள்நோயாளிகவும் சிறப்பு சிகிச்சை பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், தீவிர தொற்றுடன் வரும் நோயாளிகளுக்கு உடனே அவசரகால சிகிச்சை வழங்கிடவும் பிராண வாயு உள்ளிட்ட அத்தியவசிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, கொரோனா தொற்றிலிருந்து மீண்டு வேறு சில நோய் தொற்று ஏற்படுபவர்கள் அனைவரும் இச்சிறப்பு சிகிச்சை மையத்தினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

அதுபோலவே, இன்று ரூ.30 இலட்சம் மதிப்பில் எக்மோ எனும் செயற்கை இருதய நுரையீரல் கருவி ஒரு உயிர் காக்கும் கருவி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

தீவிர கொரோனா தொற்றால் அதிக நுரையீரல் பாதிக்கப்பிற்குள்ளாகி , நுரையீரல் செயல் இழந்துவிடும்போது பிராணவாயு உற்பத்தி செய்யப்படுவது நிறுத்தப்பட்டு அல்லது குறைவடைந்து இரத்தத்திற்கு தேவையான உயிர்பிராண வாயு குறைந்து முக்கிய உறுப்புகள் குறிப்பாக மூளை, இருதயம், கல்லீரல், சிறுநீரகங்கள் பழுதடைதல் போன்ற பல்வேறு இன்னல்கள் நேரிடுகின்றது. இத்தகைய தருணங்களில் எக்மோ கருவியானது செயற்கை நுரையீரலாக செயல்பட்டு நோயாளிகளை காப்பாற்றிட உதவுகின்றது.

இச்சிறப்பு சிகிச்சையானது பல்வேறு தனியார் மருத்துவமனைகளில் மட்டும் வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ஏழை எளியோர்களும் கிடைக்கும் வகையில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.75இலட்சம் மதிப்பில் நிமடத்திற்கு 400லிட்டர் ஆக்ஸிஜன் உற்பத்தி செய்யக்கூடிய ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையமும் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசிகளை பொருத்தவரையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அதிகளவிலான தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றது, தற்போது வரை 9, 57, 344 நபர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 3 வாரங்களில் 130 பாலூட்டும் தாய்மார்கள் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. அதே போன்று கர்ப்பிணி தாய்மார்கள் பயன்பெறும் வகையில், கொரோனா தடுப்பூசி முகாம் துவக்கிவைக்கப்பட்டுள்ளது. கர்ப்பிணி தாய்மார்களும் கர்ப்பந்தறித்த 1ஆம் மாதம் முதல் 9ஆம் மாதம் வரை தடுப்பூசி செலுத்திக்கொள்ளலாம். என மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில், அதிநவீன குழந்தைகள் தீவிர சிகிச்சைப்பிரிவு மற்றும் குழந்தைகளுக்குக்கான கொரோனா தொற்று சிகிச்சை பிரிவு ஆகியவற்றை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதுடன், சிகிச்சை பெற்றுவரும் குழந்தைகளின் பெற்றோரிடம் அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**